## பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவில் சில தீபாவளி

# கடைகள் அகற்றப்பட்டன





**பி. மலையாண்டி**

கோலாலம்பூர், அக். 19-

பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவில் தீபாவளிக்காக அமைக்கப்பட்ட சில கடைகளை டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று அகற்றியது.

காலையில் அங்கு வந்த கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்க பிரிவின் அதிகாரிகள் சில கடைகளை அகற்றிய போது பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

போக்குவரத்து நெரிசல், தீபாவளி கலை விழா நடத்த மேடையை அமைக்கும் பொருட்டு இந்தக் கடைகள் அகற்றப்பட்டதாக கூறப்படுகிறது. கடைகளை அமைத்து இரண்டு வாரமாக இவர்கள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தக் கடைகள் அகற்றப்பட்டதால் அதன் உரிமையாளர்கள் பொங்கி எழுந்தனர்.

கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக எங்கள் கடைகளை அகற்றி வயிற்றில் அடிப்பது ஏன் என அவர்கள் கேள்வியை எழுப்பினர்.